# JAN DHAN SHIKSHA - I




*Lessons*
*Resources*
*Ideas*

PRADHAN MANTRI JAN-DHAN YOJANA
MERA KHATA BHAGYA VIDHATA

# நாம் ஏன் சேமிக்க வேண்டும்?



நமது சராசரி வருமானத்தை கொண்டு வாங்க முடியாத சில பொருட்களை வாங்க,பணம் தேவைப்படுகிறது



மருத்துவம்,விபத்து,மரணம், இயற்கை சீற்றங்கள் போன்ற எதிர்பாராத நிகழ்வுகளின் போது செலவுகளை எதிர்கொள்ள சேமிப்பு அவசியம்.



சொந்த வீடு வாங்குதல்,கல்வி போன்ற அதிக செலவுகளை சமாளிக்கவும்



நமது முதுமைக் காலங்களில் நம்மால் சம்பாதிக்க இயலாத போது பணம் தேவைப்படுகிறது.

# வங்கியில் ஏன் சேமிக்க வேண்டும் ?



## பாதுகாப்பு

நாம் பணத்தை நமது தலையணைக்கு அடியிலோ அல்லது அரிசி பாத்திரத்திலோ அல்லது பணப்பையிலோ வைத்திருந்தால் திருடு போய்விட / பாதிப்படைய வாய்ப்புள்ளது. மேலும் இயற்கை சீற்றங்களான மழை, வெள்ளம் போன்றவற்றினால் பாதிப்படைய வாய்ப்புள்ளது. ஆனால் வங்கியில் சேமிக்கும் பணம் பாதுகாப்பாக இருக்கும்.



## வளர்ச்சி

வங்கியில் சேமிக்கும் பணத்திற்கு வங்கி நமக்கு வட்டி அளிக்கிறது. இதனால் வங்கியில் உங்கள் பணம் பெருகுகிறது. வீட்டில் வைத்திருக்கும் பணம் பெருகாது.



## கடன்

நாம் வங்கியில் வைத்திருக்கும் பணத்தைப் பொறுத்து நீண்ட கால வைப்புத் தொகை, தொடர் வைப்புக் கணக்கு போன்ற சேவைகளை பெறலாம்.மேலும் வங்கியில் சேமிப்புக் கணக்கு இருந்தால் வீடு வாங்குவதற்கு, கல்வி போன்ற தேவைகளுக்கு எளிதாக கடன் பெறலாம்..

# உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள்(KYC)

1
- KYC - கணக்கு தொடங்கும் போது வங்கி வாடிக்கையாளர்கள் அடையாளம் மற்றும் முகவரி பற்றிய தகவல்களை பெறுவது ஒரு செயல்முறை ஆகும்.

2
- அதிகாரப்பூர்வமாக செல்லுபடியாகும் KYC சார்ந்த ஆவணங்கள் உள்ளன அ) பாஸ்போர்ட், ஆ) டிரைவிங் லைசென்ஸ், இ) வாக்காளர்கள் அடையாள அட்டை, ஈ) நிரந்தர கணக்கு எண் அட்டை , உ) ஆதார் அட்டை, ஊ) தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்ட அட்டை.

3
- இந்த ஆவணங்களில் முகவரி விவரங்கள் அடங்கி இருந்தால், பின்னர் இது 'முகவரி சான்றாகவும் ஏற்றுக் கொள்ளப்படும்.




Passport




MNREGA




Driving License



Photograph




Aadhar Card




Pan Card




Voter ID Card

**எந்த அதிகாரப்பூர்வ ஆவணங்களும் இல்லாத போது -**
சமீபத்திய புகைப்படம் மற்றும் சில நிபந்தனைகளின் கீழ் வங்கி அதிகாரி முன்னிலையில் கையொப்பம் அல்லது பெருவிரல் ரேகை இட்டு சிறிய கணக்குகள் **(Small Accounts)** திறந்து கொள்ளலாம்.

புதிய KYC சார்ந்த ஆவணங்களை சிறிய கணக்குகள் வைத்திருப்போர் 18 வயது அடைந்த பின்னர் சமர்ப்பிக்க வேண்டும்

# கணக்கு வகைகள் ?

## சேமிப்பு வங்கி கணக்கு

- கணக்கு வைப்பு மற்றும் கணக்கில் இருந்து பணத்தை திரும்ப எளிதில் திரும்பபெற.
- வங்கி புத்தகம், வங்கி காசோலை மற்றும் ATM அட்டை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது
- வைப்புதொகை மீது வட்டி வழங்கப்படுகிறது.

## நடப்பு கணக்கு

- நடப்புக் கணக்குகள் நிறுவனத்தின் பெயரில் துவங்கப்படும் .
- பணப் பரிமாற்றங்களுக்கு எண்ணிக்கை வரம்பு இல்லை
- இந்த கணக்கில் வட்டிவழங்கப்படுவது இல்லை

## தொடர் வைப்பு கணக்கு

• ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே பணம் வைக்கப்படும்

•தொடர் வைப்பு கணக்குகளுக்கு வழங்கப்படும் வட்டி, சேமிப்பு கணக்கை விட அதிகமானது

•

•பணம் முதிர்ச்சி அடையும் முன்போ அல்லது முதிர்ச்சி அடைந்த பின்போ திரும்பப் பெறலாம்.

## நிலையான வைப்புத்தொகை

- சேமிப்பு காலம் 7 நாட்களில் இருந்து 10 ஆண்டுகள்.
- வங்கிகள் நிலையான வைப்பு மீது அதிக வட்டி வழங்கும்.
- மாதாந்திர / காலாண்டு இடைவெளியில் வட்டியைப் பெற்றுக் கொள்ளலாம்

## சிறிய கணக்குகள்

•சமீபத்திய புகைப்படம் மற்றும் சில நிபந்தனைகளின் கீழ் வங்கி அதிகாரி முன்னிலையில் கையொப்பம் அல்லது பெருவிரல் ரேகை இட்டு சிறிய கணக்குகள் (Small Accounts) திறந்து கொள்ளலாம்..

•கணக்கு 12 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

•கணக்குகளில் இருப்பு ரூ .50,000 க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

## அடிப்படை வங்கி சேமிப்புக் கணக்கில்

• குறைந்தபட்ச இருப்பு தொகை தேவை இல்லை

• டெபிட் கார்டு வசதி.

10 வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு தனிப்பட்ட நபரும் அடிப்படை வங்கி சேமிப்புக் கணக்கை துவக்கலாம்.

# சேவைகள்

**பணப் பரிமாற்றம்**

- வங்கி விரைவாகவும் திறமையாகவும், ஒரு இடத்தில் இருக்கும் நபரிடம் இருந்து மற்றொரு இருக்கும் நபருக்கு பாதுகாப்பாக பணத்தை பரிவர்த்தனை செய்கிறது
- வங்கி கிளையிலோ, வங்கி வணிகத் தொடர்பாளர் மூலமாகவோ, இணைய வங்கி, மைக்ரோ ஏடிஎம், மொபைல் பேங்கிங், மற்றும் ஆர்.டி.ஜி.எஸ் / நெப்ட் மூலமாகவோ பணப் பரிவர்த்தனை செய்யலாம்.

**மொபைல் வங்கி சேவை**

- NEFT/RTGS,IMPS மூலம் பணப்பரிமாற்றம்
- பில் கட்டணம் செலுத்தலாம்

**ATM கார்டு**

- அனைத்து PoS இயந்திரங்கள் மற்றும் அனைத்து ஏடிஎம்களிலும் பண பரிவர்த்தனை செய்யலாம்.
- தனிநபர் அடையாள எண் ( PIN) அனைத்து PoS மற்றும் ஏடிஎம் இருந்து பணம் பரிவர்த்தனை பெற பயன்படுத்தப்படுகிறது.
- PIN எண் எவருடனும் பகிர்ந்து கொள்ளுதல் கூடாது. ஏ.டி.எம் அட்டை எழுத்தறிவு பெறாத வாடிக்கையாளர்களுக்கும் வழங்கப்படும்.
- ரூபே டெபிட் கார்டு NPCI யால் வழங்கப்படும் உள்நாட்டு டெபிட் கார்டு ஆகும். இத்துடன் ரூ 1 லட்சத்திற்கான விபத்துக் காப்பீடும் கிடைக்கும்.

**இணையதள வங்கிச் சேவை**

•இணையதள வங்கிச் சேவை என்பது மின்னணு மூலம் பணம் செலுத்தும் முறை ஆகும்
•பண பரிவர்த்தனை, பில் கட்டணம் செலுத்த ,கணக்கு விசாரணை, டிக்கெட் முன்பதிவு, ஆன்லைன் ஷாப்பிங் வசதி வழங்குகிறது.

**கடன்**

- வங்கிகள் கல்வி, கார், வீடு, வீட்டு பொருட்கள் வாங்க கடன் வழங்கும்.
- விவசாயம், வணிகம், தொழில் மற்றும் சேவை துறை போன்றவற்றிக்கும் கடன் வழங்கும்.
- சூதாட்டம் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு கடன் வழங்கப்படாது .
- வங்கி கடன் மீதான வட்டி விகிதம் மிகவும் குறைவாக உள்ளது.

**மிகைப்பற்று**

அனுமதிக்கப்பட்ட அளவு வரை மிகைப்பற்று வசதி

**ஓய்வூதியம்**

அடல் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ரூ1000 முதல் - ரூ 5000 வரை ஓய்வூதியம்.

# சமூக பாதுகாப்பு திட்டங்கள்

## பிரதம மந்திரியின் மக்கள் நிதி திட்டம்- PMJDY

- பிரதம மந்திரியின் மக்கள் நிதி திட்டம்- PMJDY ஆகஸ்ட் 28 , 2014 அன்று மாண்புமிகு பிரதமரால் தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்தின் மூலம் கிராமம் மற்றும் நகரத்தில் உள்ள எல்லா குடும்பத்திற்கும் வங்கிக் கணக்கு துவங்க வழிவகை செய்கிறது.
- 10 வயதிற்கு மேற்பட்டவர்கள் சேமிப்பு வங்கி கணக்கு திறக்க முடியும்.
- இத்துடன் வழங்கப்படும் ரூபே டெபிட் கார்டுக்கு விபத்துக் காப்பீடாக ரூ 1 லட்சம் வழங்கப்படும்.
- காப்பீடைப் பெற ரூபே கார்டை பெற, குறைந்தது 45 நாட்கள் நாட்களுக்கு ஒருமுறையேனும் பயன்படுத்த வேண்டும்.
- ஓவர் டிராப்ட் வசதி - ரூ .5000/- வரை - குடும்பத்தில் ஒருவருக்கு 6 மாதம் திருப்தியான பண பரிவர்த்தனைக்கு பிறகு வழங்கப்படும்.

Pradhan Mantri
Suraksha Bima Yojana

## பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா

- PMSBY, கணக்குக் வைத்திருப்பவர்கள் விபத்தில் மரணம் அல்லது இயலாமை ஏற்பட்டால்
- விபத்து காப்பீடு திட்டம் ரூ 2.00 இலட்சம் வரை உண்டு
- 18 வயது முதல் 70 வரை வங்கி சேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்கள் அனைவரும் தகுதியுடையவர்கள்
- ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தில் தங்களை புதுப்பிக்க வருடத்திற்கு பிரீமியம் ரூ .12 / செலுத்த வேண்டும்.

## பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா

- ஏதேனும் காரணத்தால் மரணம் அடைந்தால் PMJJBY திட்டத்தின் மூலம் ரூபாய் 2.00 இலட்சம் வரை ஆயுள் காப்பீடு காப்பீட்டு அளிக்கிறது.
- வங்கி கிளைகளில் / வங்கி வணிகத் தொடர்பாளர் மூலம் இத்திட்டத்தில் சேர்ந்துக்கொள்ளலாம்
- 18 முதல் 50 ஆண்டுகள் வயது உள்ள ,சேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்கள் அனைவரும் தகுதியுடையவர்கள்
- வருடத்திற்கு பிரீமியம் Rs.330. வருடாந்திர இடைவெளியில் புதுப்பித்துக் கொள்ளலாம்.

# பிரதம மந்திரியின் முத்ரா திட்டம் (PMMY)

- மாண்புமிகு பிரதமர் அவர்கள் தொழில் அபிவிருத்தி வங்கிக்கு (SIDBI) துணையாக குறுசிறுநிறுவனங்களுக்கான முத்ரா கடன் திட்டத்தை 08.04.2015 அன்று துவங்கினார்கள்.
- இத்திட்டத்தின் மூலம் சிறிய அளவிலான உற்பத்தி நிறுவனங்கள்,வணிகர்கள்,பழங்கள் / காய்கறி வணிகர்கள்,வாடகை வண்டி நிறுவனங்கள்,சிறிய நிறுவனங்கள், கைவினை கலைஞர்கள் மற்றும் சாலையோர வணிகர்கள் போன்றவர்களுக்கு கடன் வழங்கப்படுகிறது.

**முத்ராவின் நோக்கம்**

**ஒருங்கிணைந்த முறையில் நிதி மற்றும் ஆதரவு சேவைகளை உலககின் சிறந்த மற்றும் நிலையான முறையில் சமூக வளர்ச்சிக்கு வழங்குவதே ஆகும்.**

**முத்ரா குறிக்கோள்**

ஒருங்கிணைந்த, நிலையான, தொழில் முனைவோருக்கான கலாச்சாரத்தை எங்கள் பங்குதாரர் நிறுவனங்களின் உதவியுடன் உருவாக்கி பொருளாதார மேம்பாட்டை உருவாக்குவது ஆகும்.

**முத்ரா தேவை**

ஆதரவு நிறுவனங்களை ஊக்குவித்து,சிறு குறு நிறுவனங்களுக்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் ஒருங்கிணைந்த மற்றும் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்துதல்

**தொழில் நுட்ப பட்டதாரிகள் முத்ரா திட்டத்தின் மூலம் கடன் வாங்க முடியும் என்பது பற்றி தெரியுமா ?**

தொழிலின் தன்மை மற்றும் திட்ட அறிக்கையைப் பொறுத்து முத்ரா திட்டத்தின் கீழ் கடன் பெற முடியும்..

# கடன் திட்டத்தின் பிரிவுகள்

**சிசு**
ரூ50,000/- வரை

**கிஷோர்**
ரூ50,000 முதல் ரூ5.00 லட்சம் - வரை

**தருண்**
Rs.5 லட்சம் முதல் - 10 லட்சம் வரை

அடமானம் தேவை இல்லை

சிசு கடன் திட்டத்தில் ப்ராசசிங் கட்டணம் இல்லை & பங்குத் தொகை தேவை இல்லை







எந்த ஒரு இந்தியரும் விவசாயம் தவிர்த்து உற்பத்தி,பதப்படுத்துதல், வியாபாரம், சேவை துறை போன்றவற்றில் தொழில் தொடங்க விரும்பினால் இத்திட்டத்தின் கீழ் ரூ 10,00,000 வரை கடன் வாங்கலாம்.

முத்ரா அட்டை என்பது மூலதன கடனை ஏ டி எம் ,வங்கி வங்கி வணிகத் தொடர்பாளர், POS எந்திரம் மூலம் பணம் பெற உதவும் ரூபே அட்டை ஆகும்.

## முத்ரா கடன் எவ்வாறு பெறலாம் ?



கடன் பெற விரும்புவோர்

சரியான தொழில் நுட்ப அறிவு

கடன் விண்ணப்பம்




பொதுத் துறை/ தனியார் / கிராம வங்கி / கூட்டுறவு வங்கி




கடன் விண்ணப்பங்கள் ஆய்வு

கடன் ஆவணங்கள் தயாரித்தல்

கடன் அனுமதி / தொகை வழங்குதல்

மேலும் தகவல்களுக்கு அருகிலுள்ள வங்கிக் கிளையை அணுகலாம் அல்லது www.mudra.org.in இணையதளத்தில் பெறலாம்.